# ஓய்ந்திருந்தார்




**ஆதி 2:2** கூறுகிறது **"தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்."** என்று. இங்கு சர்வ வல்லமையுள்ள தேவன் ஏதோ தான் ஆறு நாளும் செய்த சிருஷ்டிப்பின் வேலையால் களைப்படைந்தவராய் ஓய்ந்திருக்கவில்லை. ஏனெனில் வேத வசனம் கூறுகிறது, **"பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதிதேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை;" (ஏசா 40:28)** என்று. இங்கு அவர் ஓய்ந்திருப்பது நமக்காகத்தான். நம் வாழ்க்கையின் கால சக்கரத்தில் சூழன்று வரும் இந்த ஏழு நாட்களிலும், ஒரு நாள் நாம் சற்று அன்றாடக வேலைகளை விட்டு ஓய்ந்திருக்க தேவன் சித்தமுள்ளவராய் இருக்கிறார். இந்த நடைமுறை இன்று உலகெங்கிலும் பின்பற்றப்படுகிறது. மனிதனுக்கு கொடுக்கப்படுகின்ற ஒரு நாள் ஓய்வு, அவனுக்கு ஓய்வை மட்டுமல்ல, அடுத்த ஆறு நாட்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்கு ஒரு உந்துதலையும் தருகிறது.

**ஆதி 2:3** கூறுகிறது, **"தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்."** என்று. ஆம் அந்த ஒய்வு நாள் நாம் வெறுமனே சரீரத்தில் ஓய்ந்திருந்து, புத்துணர்வை பெற்றுக் கொள்ள மட்டுமல்ல, அந்த நாளில் மற்ற வேலைகள், கவலைகள், அலைச்சல்கள் எல்லாவற்றையும் மறந்து, இருதயத்தில், ஆத்துமாவில், ஆவியில் ஒரு இளைப்பாறுதலை பெற்றுக்கொள்ள, ஆண்டவருடனான உறவை பலப்படுத்தி கொள்ள அது நமக்கு ஆசிர்வாதமான நாளாக, பரிசுத்த நாளாக கொடுக்கப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டு காலத்தில் ஒய்வு நாளை குறித்து பல கட்டளைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் புதிய ஏற்பாட்டு காலத்தில் உள்ள திருச்சபையாராகிய நமக்கு வாரத்தின் முதல் நாளாகிய கர்த்தருடைய நாளிலே **(வெளி 1:10)** விசேஷ விதமாய் அவருடைய சன்னிதியில் திருச்சபையாய் கூடி அவரை ஆராதித்து, தொழுது கொண்டு,

ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் ஒரு புத்துணர்வை பெற்றுக்கொள்ளும் ஒழுங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் நாம் தேவனோடு உறவாடினாலும், கர்த்தருடைய நாளில் நாம் சபையாக, குடும்பமாக அவரை ஆராதித்து, தொழுதுகொள்ள தேவன் விரும்புகிறார்.

மேலும் ஓய்வை குறித்து நாம் இன்னும் ஆழமாக தியானிக்கும் பொழுது, ஆண்டவர் நம்மீது வைத்திருக்கும் கரிசனை விளங்கும். ஆம், தாம் சிருஷ்டித்த ஒவ்வொரு சிருஷ்டிப்புக்கும், ஆண்டவர் ஒரு ஓய்வை தருகிறார். மனிதர்களாகிய நமக்கு ஒவ்வொரு நாளும், நம் வாழ்க்கையில் ஒரு நாளாகிய 24 மணி நேரத்தில், 6 முதல் 8 மணி நேரம் வரை உறக்கத்தின் மூலம் ஒரு இளைப்பாறுதலை தருகிறார். அவரை அறிந்தவர்களுக்கு மாத்திரம் மட்டுமல்ல, அவரைப் பற்றி அறியாதவர்களுக்கும், அவரையே எதிர்ப்பவர்களுக்கும் கூட ஒரு இளைப்பாறுதலை தந்து நடத்துகிறார். அதற்கு எற்றவாறு காலை, மாலை, இரவு என்று இயற்கையின் தன்மையையும் ஏற்படுத்தியிருக்கிறார்.

**சங் 104:19-24** வசனங்கள் கூறுகிறது, **"சந்திரனைக் காலக்குறிப்புகளுக்காகப் படைத்தார்; சூரியன் தன் அஸ்தமனத்தை அறியும். நீர் இருளைக் கட்டளையிடுகிறீர், இராக்காலமாகும்; அதிலே சகல காட்டு ஜீவன்களும் நடமாடும். பாலசிங்கங்கள் இரைக்காக கெர்ச்சித்து, தேவனால் தங்களுக்கு ஆகாரம் கிடைக்கும்படித் தேடும். சூரியன் உதிக்கையில் அவைகள் ஒதுங்கி, தங்கள் தாபரங்களில் படுத்துக்கொள்ளும். அப்பொழுது மனுஷன் சாயங்காலமட்டும் தன் வேலைக்கும், தன் பண்ணைக்கும் புறப்படுகிறான். கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது"**. ஆம் நாம் ஓய்வு எடுக்கும் இரவு நேரத்தில் மற்ற விலங்கினங்களை நடமாட செய்கிறார். மனிதன் காலை எழுந்தவுடன் அவைகள் ஒதுங்கி தங்கள் தாபரங்களில் படுத்துக்கொள்ளும் என்று வேத வசனம் கூறுகிறது. ஆம், மனிதனுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் மாறி மாறி வேலை ஒழுங்கையும், இளைப்பாறுதலையும் தருகிறார். **24 ஆம்** வசனம் கூறுகிறது, **"உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்"** என்று.

ஆம் ஆண்டவர் இந்த உலகத்தையும், அதிலுள்ள மனிதர்களாகிய நம்மையும் மற்ற விலங்கினங்களையும் ஏதோ இயந்திரத்தை போல் படைக்க வில்லை. அவை எல்லாவற்றையும் ஒழுங்கும் கிரமுமாய் சிருஷ்டித்திருக்கிறார். அதில் ஓய்வு என்ற பகுதியையும், மனிதனுக்கும், மற்ற உயினங்களுக்கும் அழகாய் கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட பகுதிநேர ஓய்வை மட்டுமல்ல, நித்திய இளைப்பாறுதலையும் நமக்கு தர அவரே வல்லவர். ஆம் ஒருவேளை ஆண்டவரை அறிந்தவர்களுக்கும், அவரை அறியாதவர்களுக்கும், ஏன் எதிர்ப்பவர்களுக்கும் கூட ஆண்டவர் கிருபையாய் ஓய்வை தருகிறார். ஆனால் நத்திய இளைப்பாறுதல் அவர் பிள்ளைகளுக்கு மட்டுமே, மற்றவர்களுக்கெல்லாம் அழுகையும், பற்கடிப்பும், அக்கினி கடலுமே. அங்கு அவர்கள் இரவும் பகலும் (ஓய்வில்லாமல்) சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள் **(வெளி 20:10)**.

ஆம், சகோதர சகோதரிகளே, பெரியவர்களே, பிள்ளைகளே, நீங்கள் யாரானாலும் இன்று ஆண்டவர் உங்கள் வாழ்க்கையில் கிருபையாய்

கொடுத்திருக்கும் ஓய்வையும், நித்திய இளைப்பாறுதலையும் பற்றி விழிப்புள்ளவர்களாய் இருங்கள். இவ்வுலக வாழ்வில் நமக்கு **"மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம்" (எபே 6:12)** இருந்தாலும், ஒரு அமைதியான, இளைப்பாறுதலான வாழ்வை ஆண்டவர் நமக்கு நத்தியத்திலே தருவார். எனவே அவரையே சார்ந்து கொள்வோம், நித்திய இளைப்பாறுதலில் பங்கடைவோம். ஆமென், அல்லேலூயா.